**லங்கா எலக்ரிசிற்றி கம்பனி (பிறைவேட்) லிமிட்டட் மற்றும் அதன் துணைக்கம்பனி- 2021**

## 1. அபிப்பிராயம்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

லங்கா எலக்ரிசிற்றி கம்பனி (பிறைவேட்) லிமிட்டட் (''கம்பனி'') மற்றும் அதன் துணைக் கம்பனிகளின் (''தொகுதி'') 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப அல்லது நட்ட மற்றும் ஏனைய விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையே நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. இக் கணக்காய்வினை மேற்கொள்வதற்கு பொதுத்துறையிலுள்ள பட்டயக் கணக்காளர் நிறுவனமொன்றின் உதவியை நான் பெற்றிருந்தேன்.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து கம்பனி மற்றும் தொகுதி 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் கம்பனியின் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு

காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும்.

- எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கம்பனியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் மீதான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிராகரிக்கப்பட்ட கணக்கிலிருந்து மாற்றப்பட்ட ரூபா 14,731,287 தொகையான வாடிக்கையாளரிடமிருந்து சேகரிக்கப்பட்ட இணங்காணப்படாத சேகரிப்பு 2021 திசெம்பர் 31 இல் | உரிய வங்கி மற்றும் சேகரிப்பு முகவர்களின் உதவியுடன் அவற்றை தீர்ப்பனவு செய்வதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தது. | (i) பேரேட்டுக் கணக்குகளிலுள்ள இணக்கஞ்செய்யப்படாத கொடுக்கல்வாங்கல்களை தீர்ப்பனவு செய்வதற்குரிய |

| | | | |
|---|---|---|---|
| | உள்ளவாறான ஏனைய கடன்கொடுத்தோர்களின் மீதிகளின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | | நடவடிக்கைகள் எடுக்கவேண்டியுள்ளது.<br>(ii)இனங்கபணப்படாத சேகரிப்புக்களை குறைப்பதற்கு உள்ளக கட்டுப்பாட்டு முறைமை முன்னேற்ற வேண்டும். |
| (ஆ) | 2021 நவம்பர் 16 ஆந் திகதிய பீஈடி/01/2021 ஆம் இலக்க அரச உரித்துடைய நிறுவனங்களின் செயன்முறைக் கையேட்டின் 6.9 ஆம் பிரிவின் பிரகாரம், இயக்குனர் சபையானது குறித்த செய்முறையை மேற்கொள்வதன் மூலம் நட்டங்களை பதிவழிக்கக்கூடுமென்பதுடன் அது தொடர்பாக கணக்காய்வுக் குழுவின் பிரேரணைகளை உள்ளடக்கி பின்பற்றப்பட்ட செய்முறையொன்றிருந்தது என உறுதிப்படுத்தப்பட வேண்டும். எனினும், இது தொடர்பில் கம்பனியானது செய்யப்பட்ட செய்முறையை பின்பற்றியிருக்காததுடன் மாநகரசபையிடமிருந்தும் மாகாண சபையிடமிருந்தும் தெரு விளக்குகளுக்கான கிடைக்கப்பெற வேண்டியிருந்த கடன்பட்டோர் மீதியாக ரூபா 387,806,335 2021 நவம்பர் 30 இல் கொடுக்கப்பட்ட சபை அனுமதியை அடிப்படையாகக் கொண்டு மீளாய்வாண்டின் போது பதிவழிக்கப்பட்டிருந்தது. | கணக்காய்வாளரின் அவதானிப்புக்களுடன் இணங்கப்பட்டது. இந்தப் பதிவழிப்புக்கள் இயக்குனர் சபையின் அனுமதிகளுடன் மாத்திரம் மேற்கொள்ளபட்டிருந்தது. இயக்குனர் சபைக்கு அனுப்புவதற்கு முன்னர் கணக்காய்வுக் குழுவின் முன்னைய அனுமதியைப் பெற வேண்டியிருந்தது. | சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகளுக்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | ஆண்டின் ஒட்டுமொத்த வாடிக்கையாளர்களிடமில்லாமல் பெறப்பட்ட வருமானம் அடுத்த ஆண்டில் ஒட்டுமொத்த வாடிக்கையாளர்களிடமில்லாமல் பெறப்பட்ட வருமானமானமாக இணங்காண்பதற்கு பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க, 2020 திசெம்பரில் ஒட்டுமொத்த வாடிக்கையாளர்களில்லாதோரிடமிருந்து பெறப்பட்ட வருமானம் 2021 சனவரியில் வருமானமாக இணங்காணப்பட்டிருந்தது. ஆகையால், ஒட்டுமொத்த வாடிக்கையாளர்களில்லாதோரிடமிருந்து பெறப்பட்ட வருமானத்தின் சரியான தன்மை மற்றும் முழுமையான தன்மை சரியாக நிர்ணயிக்கமுடிந்திருக்கவில்லை. | ஒவ்வொரு மாதத்தின் 1வது நாளிலிருந்து 25 ஆம் நாள் வரைக்கும் சில்லறை (ஒட்டுமொத்தமல்லாத) சிட்டைகள் விநியோகிக்கப்பட்டிருந்தது. திசெம்பர் மற்றும் சனவரி மாதத்திற்கான நுகர்வானது திசெம்பர் பற்றுச்சீட்டுதலுடன் கலவைசெய்யப்பட்டதுடன் அவற்றை இரண்டுமாதங்களுக்கு பிரிக்க முடியாதிருந்தது. ஆகையால், இந்த வருமானங்கள் வருகின்ற மாதத்துடன் எப்பொழுதும் வாசிக்கப்படுகின்றது. | எஸ்எல்எவ்ஆர்எஸ் - 15 இன் பிரகாரம் வாடிக்கையாளர்களிடமிருந்தான வருமானத்தை சரியாக பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்காய்விற்கு ஆவணச்சான்றுகள் கிடைக்காமை

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 2017, 2019 மற்றும் 2020 ஆம் சீஈபீயால் கொள்வனவு செய்யப்பட்ட சக்திக்கிரயத்திற்காக பெறவேண்டிய ரூபா 1,336,859,095 தொகையை உள்ளடக்கி வேறுபட்ட சேவைகளுக்காக இலங்கை மின்சார சபையிடமிருந்து (சீஈபீ) பெறவேண்டிய மீதி தேறிய கணக்கீட்டு மற்றும் தேறிய சேர்க்கை முறைமையை பயன்படுத்தி ரூபா 1,343,821,164 தொகையாகவிருந்தது. எனினும், அத்தொகைக்கான மீதி உறுதிப்படுத்தல்கள் கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்றிருக்கவில்லை. | முன்னைய வருடங்களுக்கான மீதிகளை தீர்த்தல் தொடர்பில் கலந்துரையாடல்கள் போய்க்கொண்டிருக்கின்றன. | கணக்காய்விற்கு மீதி உறுதிப்படுத்தல்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியுள்ளது. |
| (ஆ) | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு லங்கா பிறோட் பான்ட் நெட்வோக் (பிறைவேட்) லிமிட்டட்டில் மூதலீடு செய்யப்பட்ட சாதாரண பங்குகளில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 5,000,000 தொகையான முதலீடுகள் தொடர்பில் பங்குச் சான்றிதழ் மற்றும் ஏனைய போதிய சரியான ஆவணச் சான்றுகள் | கம்பனியிடமிருந்து பல முறை கோரிக்கை விடுத்தாலும், இவ் முதலீட்டிற்கான பங்குச் சான்றிதழைப் பெறவில்லை. இவ் நிலுவையை அறவிடுவதற்காக LECO சட்ட ஆலோசனையை | முதலீட்டுப் பெறுமதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்றிருக்கவில்லை. | சட்டமா அதிபர் திணைக்களத்திடமிருந்து கோருகின்றது. | |
| (இ) | மின்சார சபைக்கும்(சீஈபீ) கம்பனிக்கும் இடையே கைச்சாத்திடப்பட்ட முறையாயன வலு கொள்வனவு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. | இப்பொழுது வரைபு உடன்படிக்கையொன்று இருப்பதுடன் சீஈபீ மற்றும் உரிய தரப்பினர்களுடனும் கலந்துரையாடல்கள் இடம்பெறுகின்றன. | சீஈபீயுடன் முறையான உடன்படிக்கையில் ஈடுபடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | சீஈபீயின் முதற்தர உபநிலையங்களை நிர்மாணிப்பதற்கு பயன்னடுத்தப்பட்ட காணிகளை கொள்வனவு செய்வதற்கு ரூபா 206,924,712 கிரயத்தொன்றினை ஏற்படுத்தியிருந்ததுடன் அத்தொகை சீஈபிடமிருந்து பெறவேண்டிய தொகையாக பதிவுசெய்யப்பட்டிருந்தது. எனினும், கம்பனியின் காணிகளில் முதற்தர உபநிலையங்களை கட்டியெழுப்புவது தொடர்பில் கம்பனி மற்றும் சீஈபிக்கும் இடையில் மேற்கூறப்பட்ட காணிகள் மற்றும் கட்டிடங்களை பயன்படுத்துவதற்காக சீஈபியால் செலுத்தப்பட வேண்டிய கட்டணங்கள் தொடர்பில் முறையான உடன்படிக்கையிருக்கவில்லை. | இணங்கப்பட்டது. இது இயக்குனர் சபைக்கு சமர்ப்பிக்கப்படுவதுடன் அவர்களுடைய அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்படும். | சீஈபீயுடன் முறையான உடன்படிக்கையில் ஈடுபடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டியவைகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மின் சுய உற்பத்திக்காக சீஈபியிடமிருந்து பெறவேண்டியவையாக இருந்த ரூபா 3,912,584 மீதி மீளாய்வாண்டின் இறுதிவரை அறவிடமுடியாதாகவிருந்தது. எனினும், அந்தத்தொகை தொகை தொடர்பிலான மீதி உறுதிப்படுத்தல்கள் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை. | இந்த விடயம் குறித்த காலப்பகுதிக்காகவிருந்ததுடன் முறையான அனுமதியுடன் இதனை பதிவழிப்புச்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | (i) சீஈபியிடமிருந்து பெறவேண்டிய மீதியை அறவிடுவதற்கும்<br>(ii) மீதி உறுதிப்படுத்தல்களை கணக்காய்விற்கு வழங்குவதற்கும்<br>நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 1991, 2001 மற்றும் 2002 ஆம் ஆண்டுகள் தொடர்பிலான ரூபா 12,020,077 தொகையான வற் மற்றும் ஜீஎஸ்ரீ மீள்நிதிகள் மீளாய்வாண்டின் இறுதியளவிலும் அறவிடப்படாதிருந்தது. | குறிப்பிடப்பட்ட மீள்நிதி வரியினை அறவிடுவதற்காக LECO வரி ஆலோசகர்கள் தொடர்ச்சியான பின்தொடர் செய்முறையிலிருப்பதுடன் | உள்நாட்டு இறைவரித்திணைக்களத்திடமிருந்து அறவிடவேண்டியவற்றை அறவிடுவதற்கு முறையான நடவடிக்கைகள் எடுக்கப்பட |

| | | | |
|---|---|---|---|
| | | ஆலோசகர்கள் செய்முறையை நாளதுவரையாக்கி பின்தொடருவதற்கு அடுத்த கிழமையளவில் மேலுமொரு ஞாபகமூட்டலை அனுப்புவார். | வேண்டியிருந்தது. |

### 1.6.2 செலுத்தவேண்டியவைகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கம்பனியானது வசதிகளினை இடைநிறுத்தியதன் பின்னர் ரூபா 10,517,832 வைப்புக்களை மீள்திருப்பியிருக்காததுடன் இத்தகைய மீதிகள் நீண்ட காலப்பகுதிக்கு மீதமாகவிருந்தது. மேலும், நீண்ட காலப்பகுதிக்கு தற்காலிக இணைப்பு வைப்புக்களின் கீழ் களணி மற்றும் காலி கிளைகளிற்காக ரூபா 373,525 எதிர்மறை மீதிகள் உள்ளடக்கப்பட்டிருந்தது. | சொல்லப்பட்ட வைப்புக்கள் மீள்நிதியிடாமல் இருந்தமை என சொல்லப்பட்ட வாடிக்கையாளர் பிரச்சனையால் கிளை மட்டத்தில் மீள்நிதியிடுவதற்கு அனைத்து உரிய நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருந்தது. அனைத்து எதிர்மறை மீதிகளும் செவ்வை செய்யப்பட்டதுடன் முறைமை பிரச்சனையால் அவை இனங்காணப்பட்டது. தகவல் தொழில்நுட்ப பிரிவின் உதவியுடன் உரிய அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும். | வைப்புக்களை மீள்நிதியிடுவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | நுகேகொட, கோட்டை மற்றும் மொறட்டுவ கிளைகளில் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கொள்வனவு ஏற்பாட்டு பேரேட்டில் நீண்டகாலமாக முன்கொண்டுவரப்பட்ட மீதிகள் முறையே ரூபா 4,290,869 , ரூபா 1,427,860 மற்றும் ரூபா 7,618,233 ஆகும். எனினும், மீளாய்வாண்டின் இறுதியளவிலும் இந்த நீண்டகால மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு கம்பனியால் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கொள்வனவு ஏற்பாட்டு கணக்குகள் பகுப்பாய்வு செய்யப்படுமென்பதுடன் அதற்கிணங்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும். | நீண்டகால நிலுவையை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.6.3 முற்பணங்கள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நீண்ட கால நிலுவையாகவுள்ள வற் கொடுப்பனவுத் தொகை ரூபா. 33,427,699 முற்கொடுப்பனவின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் கணக்காய்வுத் திகதி வரை மேலே கூறப்பட்ட நிலுவைகளை கம்பனியால் அறவிடப்படமுடிந்திருக்கவில்லை. | இது தற்போதும் நிலுவையிலுள்ளது. அனைத்து நடவடிக்கைகளும் LECO மட்டத்தில் எடுக்கப்பட்டிருந்தது. உள்நாட்டு இறைவரித்திணைக்களத்தின் தீர்மானமானது நிலுவையிலுள்ளது. | உள்நாட்டு இறைவரித்திணைக்களத் திடமிருந்து நிலுவைகளை அறவிடுவதற்கு முறையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | பயிற்சி நிலையம், பரீட்சிப்பு ஆய்வுகூடம் மற்றும் சில கிளைகளில் உள்ள ரூபா 1,676,661 தொகையான தொங்கல் கணக்கு மீதியை வைப்பு மற்றும் முற்பணங்கள் தொகை உள்ளடக்கியிருந்தது. ஆகையால், 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வைப்பு மற்றும் முற்பணங்களின் மீதி அதே தொகையால் குறைத்துக்ககாட்டப்பட்டிருந்தது. | அத்தகைய ஜீஎல் கணக்கானது 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இருப்பு எடுத்தல் மீதிகளை உள்ளடக்கியிருந்தது. பௌதீகரீதியில் உறுதிசெய்யப்பட்ட மீதியினை இருப்பிற்கு நாளதுவரையாக்கியவுடன் வித்தியாசம் ஜீஎல் கணக்கிற்கு மாற்றப்பட்டது.<br>பயிற்சி நிலையம், மற்றும் பரீட்சிப்பு ஆய்வுகூடத்திலிருந்து விநியோகிக்கப்பட்ட சில இருப்புக்கள் புரோனோ முறையின் இருப்பு முறைமைக்கு நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. அவர்கள் கைமுறையாக அனைத்து அறிக்கைகளையும் பேணியிருந்தனர். இதுவே வித்தியாசங்களுக்கு பிரதான காரணமாகவிருந்தது. இது 2022 இல் நாளதுவரையாக்கப்படும். ஏனைய அனைத்து கிளைகள் வித்தியாசங்களும் விசாரணையின் கீழுள்ளதுடன் காரணங்கள் கண்டுபிடிக்கப்பட்டதும் இருப்புக்கள் பேரேடு நாளதுவரையாக்கப்படும். | நிதிக்கூற்றுக்களை சரியாக சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | (i) முற்பணங்கள் கொடுக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் தொடர்பிலான தகவல்களை உள்ளடக்கிய முறையான முற்பணப் பதிவேடு கொடுக்கப்பட்டதுடன் தீர்ப்பனவுகளின் விபரங்கள் கம்பனியால் பேணப்பட்டிருக்கவில்லை. | கம்பனியானது Excel முறையில் முற்பணப்பதிவேட்டொன்றை பேணுவதுடன் இது காலரீதியில் கணக்காணிக்கப்படுவதுடன் அதற்கிணங்க நாளதுவரையாக்கப்படுகின்றது. பிரேரணைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன் அமுல்படுத்தப்படும். | முற்பணங்களின் முறையான பதிவேடுகள் பராமரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | கணக்காய்வுத்திகதியளவில் ஊ+ம் 2022 மே 30 கம்பனியின் 38வது ஆண்டுவிழாவிலிருந்து எட்டு மாதங்கள் கடந்திருந்த போதிலும் சொல்லப்பட்ட நிகழ்ச்சி தொடர்பில் சில உத்தியோகத்தர்களுக்கு கொடுக்கப்பட்ட ரூபா 1,613,300 தொகையான முற்பணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மூன்று ஹொட்டல்களிடமிருந்து பற்றுச்சீட்டுக்கள் ஏற்கனவே பெறப்பட்டிருந்ததுடன் எஞ்சிய ஹொட்டல் அவர்களுடைய பற்றுச்சீட்டுக்களை ஒரு கிழமைக்குள் சமர்ப்பிக்கும். நடவடிக்கைகள் பின்தொடரப்படும். | காலதாமதமில்லாமல் முற்பணங்களை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். |
| (ஈ) | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாற கம்பனியின் ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்கள், மரணமடைந்த உத்தியோகத்தர்கள் மற்றும் வேலையைவிட்டுச்சென்ற உத்தியோகத்தர்கள் போன்றோர்களிடமிருந்து ரூபா 6,025,413 தொகையான கடன்மீதிகள் அறவிடாதிருந்தது. | சட்டப்பிரிவின் உதவியுடன இந்த விடயங்களை திருத்துவதற்கு அனைத்துரிய நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருந்தது. | கடன்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.7 காசு முகாமைத்துவம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கிளைகளில் பின்பற்றவேண்டிய சேகரிப்பு செயற்பாடுகள் மற்றும் செய்முறைகள் தொடர்பாக பிரதம நிதி அலுவலகரால் விநியோகிக்கப்பட்ட 2018 திசெம்பர் 20 ஆந் திகதிய சுற்றறிக்கையின் பிரகாரம், உதாரணமாக இணக்கக்கூற்றுக்களை பரீட்சித்தல், நாளதுவரையாக்கல்கள், சிட்டைகள், புறோன்ரோ மற்றும் காசுப்புத்தகங்களைப் பரீட்சித்து அங்கீகரித்தல் போன்ற காசாளர் சம்பந்தமான காசு சேகரித்தல் வேலைகளுடன் தொடர்புடைய அனைத்து வேலைகளும் இரண்டு வேலைநாட்களுக்குள் இறுதியாக்கப்பட்டு முடிவுறுத்தப்படும். அதற்கிணங்க, வாடிக்கையாளரிடமிருந்து பெறவேண்டியவைகள் காசாளரால் பற்றுச்சீட்டிடல் முறைமையில் பதிவு | கருத்துரைகளுடன் இணங்கப்பட்டது. புதிய ஈஆர்பி முறைமையின் அமுலாக்கலுடன் இரண்டு முறைமைகளுக்கிடையில் ஒருங்கிணைத்தல் வசதிகளை வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | காசு சேகரிப்பு முதற்பதிவேட்டில்/ பேரேட்டில் உரிய நேரத்தில் பதிவு செய்யப்படும். |

செய்யப்பட்டிருந்ததுடன் சிட்டை முறைமையினூடாக வாடிக்கையாளர்களுக்கு விநியோகிக்கப்பட்டிருந்தது. எனினும், காசு சேகரித்தல் செய்முறையூடாக பெறப்பட்ட வருமானம் அத்தகைய இரண்டு முறைமைகள் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டிருக்கவில்லை. அதற்குப்பதிலாக, கொடுக்கல்வாங்கல் இடம்பெற்று சில நாட்களின் பின்னர் தொகையாக பொதுப்பேரேட்டில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. அதற்கிணங்க, தற்போதுள்ள முறைமையிலுள்ள கொடுக்கல்வாங்கல் இல்லாதுபோதல், தவறுகள் மற்றும் வழுக்களிலுள்ள இடரினை கணக்காய்வில் உட்படுத்தமுடியாதுள்ளது.

## 1.8 சட்டங்கள், விதிகள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இடையிலான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | சிபாரிசு |
|---|---|---|---|---|
| (அ) | 2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொதுமுயற்சிகள் சுற்றறிக்கையின் 9.14 இன் (iv) ஆம் பிரிவு | நிறுவனத்தால் பின்பற்றப்பட்ட எந்தவொரு நலன்புரித்திட்டமும் திறைசேரி பொது முயற்சிகள் திணைக்களத்தின் அனுமதியொன்றை வைத்திருக்க வேண்டியபோதிலும் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 20,226,519 கூட்டுத்தொகையை கொண்டுள்ள கம்பனியின் புலமைப்பரிசில் நிதியம் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் | 2009 ஆம் ஆண்டில் இயக்குனர் சபையினால் அனுப்பப்பட்ட இயக்குனர் சபைப் பத்திரத்தின் வழிகாட்டலின் கீழ் இந்த நிதியம் உருவாக்கப்பட்டது. ஆரம்பத்தில் இது கம்பனி உத்தியோகத்தர்கள் தொடர்பாக விதிக்கப்பட்ட தண்டபணங்கள் மற்றும் தாமதக்கட்டணங்கள் போன்றவற்றிற்காக ஒதுக்கப்பட்ட கணக்கொன்றாகவிருந்தது டன் சேகரிக்கப்பட்ட பணம் கம்பனியின் ஏனைய நோக்கங்களிற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில் | வழிகாட்டிகள் மற்றும் சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுடன் இணங்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | தேவையான அனுமதியைப் பெற்றிருக்கவில்லை. . | லை. இரண்டாவதாக, இந்தக் கணக்கானது உத்தியோகத்தர்களின் பிள்ளைகளுக்கு நன்மையளிப்பதற்காக புலமைப்பரிசில் நிதியத்தை உருவாக்குவதற்காக அபிவிருத்தி செய்யப்பட்ட கணக்கொன்றாகவிருந்தது. சபை அறிவுறுத்தல்களின் பிரகாரம், வாகன விற்பனைகள் தவிர்ந்த ஏனையவை மூலம் மீளாய்வாண்டில் பெறப்பட்ட கழிவு விற்பனையின் உயர் பெறுமதியைப் பயன்படுத்தி நிதியம் உருவாக்கப்பட்டு வருகின்றது. பாதீட்டின் மூலம் இங்கு எந்தவித நிதி ஒதுக்கீடும் இருக்கவில்லை. இந்த நிதியமானது 2016 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் நாட்டின் நிலமை காரணமாக எற்றவித புலமைப்பரிசில்களும் 2018 இன் பின்னர் வழங்கப்பட்டிருக்கவில்லை. | |
| (ஆ) | எல்கேஎஸ் 02 இன் 09 ஆம் பிரிவு. | இருப்புக்கள் கிரயத்தில் அல்லது தேறிய நிகர பெறுமதியில் குறைந்த பெறுமதியில் அளவிடப்படும். இருப்பினும், பங்கு மதிப்பீட்டிற்கான தேறிய நிகரப் பெறுமதியினை கம்பனி கருத்தில் கொள்ளவில்லை | திறந்த சந்தை மற்றும் உடனடியாக கிடைக்கக்கூடியதாகவுள்ள விலைத் தகவல்களிலிருந்து அனைத்து இருப்புக்களும் கொள்வனவு செய்யப்பட்டது. இந்த உருப்படிகள் அழியடையதாகவிருந்ததுடன் கைத்தொழில் தன்மையிலுள்ளது. ஆகையால் முகாமைத்துவமானது இந்த உருப்படிகளின் தேறிய பெறுமதியானது கிரயத்தை விட அதிகமாகவுள்ளதென | -மேற்கூறப்பட்டவாறு- |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | உறுதியாகவுள்ளது. மேலும், தேறிய பெறுமதியின் நட்டத்தை ஈடு செய்கின்ற மெதுவாக நகருகின்ற பொருட்களிற்காக நாங்கள் ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தோம். | |
| (இ) | எல்கேஎஸ் 01 இன் பந்தி 32 - நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல் | சிட்டையிடல் முறைமையில் உள்ளடக்கப்பட்ட மீளாய்வாண்டிற்கான வியாபார வருமதிகளிற்கு எதிராக ரூபா 2,931,813 தொகையான வாடிக்கையாளர்களின் செலவு மீதிகள் எதிரீடு செய்யப்பட்டிருந்தது. மேலும், அனைத்து இந்த வரவு மீதிகள் மின்சார சிட்டைகளிற்காக மேலதிகமாக செலுத்தப்பட்டிருக்காததுடன் அவைகளில் அதிகமானவை சோலர் கடனாளிகளிடமிருந்து சேகரிக்கப்பட்ட கொடுப்பனவுகளாகவிருந்தது. கம்பனியானது சேகரிக்கப்பட்ட சோலர் கடன் தவணைப்பணங்களை சிட்டை முறைமையிலிருந்து பெறப்பட்ட தீர்ப்பனவு அறிக்கையினை அடிப்படையாகக் கொண்டு தேசிய சேமிப்பு வங்கிக்கு சேகரிக்கப்பட்ட கடன் தவணைப்பணங்களாக மாற்றுகின்றது. சோலர் கடன் தவணைப்பணங்களானது சிட்டை முறைமையில் சரியாக நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.. அதன் | கணக்காய்வாளரின் கருத்துடன் இணங்கப்பட்டதுடன் இந்தப் பிரச்சனைகளை திருத்துவதற்கு பின்வருமாறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தது. தானாக ஒதுக்கப்பட்ட கடன் சேகரிப்பு தொகை வாராந்தம் வங்கிக்கு திருப்பப்படுகின்றது.<br>(அ) வாடிக்கையாளர் கோரிய தொகை வாராந்தம் வங்கிக்கு திருப்ப்படுகின்றது.<br><br>(ஆ) வங்கி கோரிய அனுப்புதல்கள் வாராந்தம் வங்கிக்கு அனுப்பபடுகின்றது.<br>(இ) ஒவ்வொரு மாத இறுதியளவிலும் சோலர் கடன் செலவு மீதி அறிக்கை செயற்படுவதுடன் மேற்கூறப்பட்ட ரூபா 4,000.00 செலவு மீதிகள் சிட்டை அச்சிடல் செய்முறைக்கு முன்னதாக திருப்பல்கள் என்எஸ்பீக்கு திருப்பபடுகின்றது. | -மேற்கூறப்பட்டவாறு- |

| | | | |
|---|---|---|---|
| | விளைவால், மேற்கூறப்பட்ட கடன் தீர்ப்பனவு அறிக்கை சரியாக இல்லாதிருப்பதுடன் சேகரிக்கப்பட்ட தவணைப்பணங்களைவங்கிக்கு மாற்றுவதில் காலதாமதமொன்று ஏற்பட்டது. | | |

**1.9 ஏனைய அவதானிப்புக்கள்**

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கணக்காய்விற்கு கணக்காய்வுச் சான்று கிடைக்கப்பெற்றிருக்காமையால் பின்வரும் செயற்திட்டங்களிற்காக செலவழிக்கப்பட்ட தொகையை மற்றும் இந்தச் சொல்லப்பட்ட செயற்திட்டற்களின் நிலைமையின் உண்மைத்தன்மையை தீர்மானிக்க இயலாமலிருந்ததுடன் இந்தச் செயற்திட்டங்களின் சொல்லப்பட்ட நிலைமையின் உண்மைத்தன்மை முகாமைத்துவத்தின் கருத்துரைகளில் கொடுக்கப்பட்டிருந்தது. | | |
| (i) | நுகேகொடவிலுள்ள நிலத்திற்கு கீழான செயற்திட்டம் | ஏனைய அக்கறையுடைய தரப்பினர்களால் உருவாக்கப்பட்ட அக்கறைகளினால் பட்டியலிடப்பட்டதன் பிரகாரம் செயற்திட்டம் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லாததுடன் இது 2021 முதலாவது காலாண்டில் பூர்த்திசெய்யப்பட்டது. தற்போது, யூஜீ இணைப்பினுடாக 11 கேவி விநியோகம் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் மேல் இணைப்புக்கள் அர்ப்பணிப்பான துளைகளை மாற்றியதன் பின்னர் அகற்றுவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. | உரிய ஆவணங்கள் கணக்காய்விற்கு கிடைக்கக்கூடியதாகவிருந்தது. |
| (ii) | பச்சை வலய செயற்திட்டம் - கோட்டை | வலு விநியோக இணைப்புக்களின் பிரிவில் உண்மை நேர தகவல்களை பெறுவதற்கு இந்தச் செயற்திட்டம் 144 இணைப்புக் கணக்காணிப்பு கருவிகளுடான 3200 ஸ்மாட் | -மேற்கூறப்பட்டவாறு- |

| | | | |
|---|---|---|---|
| | | மீற்றர்களுடன் ஆரம்பத்தில் இணைக்கப்பட்டது. LECO உடன் இணைப்பில் வேலைசெய்த மொறட்டுவப் பல்கலைக்கழகம் மற்றும் டயலொக் அக்ஸியரோ ஜீஎஸ்எம்ஏ, யூகே நிறுவகத்திடமிருந்து பெறப்பட்ட மானியத்துடன் இந்தச் செயற்திட்டத்தை மேற்கொள்கிறது. | |
| (iii) | சிக்வி செயற்திட்டம் | LECO முழுவதும் ஸ்மாட் மீற்றர்களைப் பொருத்துவதற்காக “சிக்வி” என பெயரிப்பட்ட வலை இணைப்பு தொடர்பாடல் அல்கோரிதமை பயன்படுத்தி தொடர்பாடல் முறைகளை பரீட்சிப்பதற்காக 2015 இல் இந்தச் செயற்திட்டம் தொடங்கப்பட்டிருந்தது. LECO சிக்வி தொகுதிகளை பயன்படுத்தி 100 ஸ்மாட் மீற்றர்களை வெற்றிகரமாக பொருத்தியதுடன் LECO தரவுத்தளத்திற்கு 95%க்கு மேலதிக வெற்றிகர வீதத்துடன் அத்தகைய மீற்றர்கள் இணைக்கப்பட்டது. | -மேற்கூறப்பட்டவாறு- |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவு ரூபா 5,113,976,341 இலாபமொன்றானதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான இலாபம் ரூபா 2,424,970,973 ஆக காணப்பட்டதால் நிதி விளைவுகளில் ரூபா 2,689,005,368 தொகையான முன்னேற்றமொன்றை சுட்டிக்காட்டுகின்றது. பங்குலாப வருமானம் மற்றும் உள்நாட்டு கட்டண வகைகள் தொடர்பான வருமானம் அதிகரித்தமை இந்த முன்னேற்றங்களிற்கான காரணங்களாக அமைந்தது.

### 2.2 பிரதான வருமான செலவின விடயங்களின் போக்கு தொடர்பான பகுப்பாய்வு

(அ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டிற்கான வருமானம் 6 சதவீத்தினால் அதிகரித்திருந்தது. அதே நேரத்தில் விற்பனை செலவு 01 சதவீதத்தால் அதிகரித்திருந்ததுடன் மீளாய்வாண்டின் மொத்த இலாபம் 28 சதவீதத்தால் அதிகரித்துள்ளது.

(ஆ) மீளாய்வாண்டின் ஏனைய தொழிற்பாட்டு வருமானதத்தினை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 151 சதவீதத்தினால் அதிகரிததுள்ளது. பங்கு இலாப வருமானம் அதிகரித்தமையே இவ் முன்னேற்றத்திற்கு பிரதான காரணமாகவுள்ளது.

(இ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது மீளாய்வாண்டிற்கான நிதி வருமானம் 8 சதவீதத்தால் குறைவடைந்தது.

## 2.3 விகிதப் பகுப்பாய்வு

(அ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் கம்பனியின் மொத்த இலாப விகிதம் 19 சதவீதத்திலிருந்து 23 சதவீதமாக அதிகரித்துள்ளது. தேறிய இலாப எல்லையானது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது 6 சதவீதத்திலிருந்து 10 சதவீதமாக அதிகரித்துள்ளது.

(ஆ) உரிமை மீதான திரும்பல் உரிமை மீதான திரும்பல் (ஆர்ஓஈ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது 5 சதவீதத்திலிருந்து 8 சதவீதமாக அதிகரித்துள்ளது.

(இ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது நடைமுறை விகிதம் 4.02 இலிருந்து 3.31 இற்கு குறைவடைந்துள்ளது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

## 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தேறிய கணக்கு மற்றும் தேறிய மிகை முறையைப் பயன்படுத்தி சூரியகலன் கடன் திட்டத்துடன் தொடர்புடைய மின்சாரத்தை கொள்வனவு செய்வதற்கு இலங்கை மின்சார சபைக்கும் கம்பனிக்கும் இடையில் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | முறையான ஒப்பந்தம் மேற்கொள்ளப்படவில்லை. ஆனால் கணிப்பீட்டினை அடிப்படையை தெளிவாக பரிந்துரைக்கின்ற 2017/01 ஆம் இலக்க மீள்சக்தியை அடிப்படையாகக்கொண்டு மின்வலு அமைச்சிடமிருந்து அனுப்பப்பட்ட 2017/01/24 ஆந் திகதிய பீஈ/ரீஈசீஎச்/டி/6/ஆர்1 ஆம் இலக்க கடிதத்ததை அடிப்படையாக கொண்டு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | சீஈபீயுடன் முறையான ஒப்பந்தம் செய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | களனி, கோட்டை ஆகிய இடங்களில் கிளை அலுவலகங்களையும், தலுகம, வத்தளை, நீர்கொழும்பு, நுகேகொட ஆகிய இடங்களில் வாடிக்கையாளர் சேவை நிலையங்களையும் பயகல மற்றும் பாணந்துறையில் வாடிக்கையாளர் சேவை நிலையங்களின் தங்குமிட வசதிகளையும் நிர்மாணிப்பதற்காக முறையே 2001, 2000, 2015, 1994, 2018, 2001, மற்றும் 2019 ஆகிய ஆண்டுகளில் முறையே காணிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் கட்டுமான வேலைகள் தொடங்கப்படவில்லை.<br>மேலும், கம்பனியின் இந்தக் கிளை அலுவலகங்கள் மற்றும் வுாடிக்கையாளர் சேவை நிலையங்கள் | நீர்கொழும்பு, நுகேகொட ஆகிய இடங்களில் வாடிக்கையாளர் சேவை நிலையங்கள் களனிளிலுள்ள கிளை அலுவலகம் பெறுகைச்செய்முறையின் கீழ் இருப்பதுடன் தலுகம வாடிக்கையாளர் சேவை நிலைய ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. வருடாந்தமோ அல்லது அரையாண்டாகவோ அனைத்து வாடகைகளும் நீடிக்கப்பட்டது. நிர்மாணம் முடிவடைந்ததுடன் செயற்பாடுகள் புதிய இடங்களிற்கு மாற்றப்படும். கந்தான வாடிக்கையாளர் சேவை நிலையம் நிர்மாணிக்கப்பட்டு ஏற்கனவே மாற்றப்பட்டிருந்தது. | நிர்மாணச்செய்முறையை விரைவுபடுத்துவதன் மூலம் வாடகைச் செலவினை குறைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

மீளாய்வாண்டின் இறுதியளவிலும் வாடகைக்கெடுத்த இடங்களில் செயற்படுவதால் கம்பனியானது மீளாய்வாண்டிற்காக ரூபா 1,905,700 தொகையினை செலுத்தவேண்டியேற்பட்டது.

(இ) தொடர்ச்சியான நுகர்வு நிலைமையில் உள்நாட்டு வகையின் கீழ் நிலையான இலத்திரனியல் சிட்டைகள் வணிகத்தை மேற்கொண்டிருந்த கந்தானையிலுள்ள வாடிக்கையாளர் சேவை நிலையத்தின் (சீஎஸ்சீ) வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. மேலும், மதிப்பிடப்பட்ட சிட்டைகள் 2015 இலிருந்து 2022 வரைக்கும் மேற்கூறப்பட்ட வாடிக்கையாளர்களுக்கு விநியோகிக்கப்பட்டிருந்தது. முறையான விசாரணை வாடிக்கையாளர்கள் சேவை மேற்பார்வையாளர் மற்றும் சீஎஸ்சீ இன் வருமான உத்தியோகத்தர்களுக்கு எதிராக இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்டிருந்தது. மேற்கூறப்பட்ட விசாரணையை பூர்த்திசெய்த பின்னர் விசாரணையால் வழங்கப்பட்ட அறிக்கைகள் மற்றும் ஏனைய பிரேரணைகள் மூன்றாம் தரப்பினரால் மீளாய்வு செய்யப்பட்டதுடன் உரிய குற்றஞ்சுமர்த்தப்பட்ட உத்தியோகத்தர்கள் உரிய அனைத்து குற்றங்கிளடமிருந்தும் விடுவிக்கப்பட்டார்.

இது தொடர்பில் கம்பனியின் விசாரணைப்பிரிவால் மேற்கொள்ளப்பட்ட ஏனைய விசாரணையின் பிரகாரம் , மேற்கூறப்பட்ட வாடிக்கையாளர்களிடமிருந்து 2014 ஏப்ரல் 20 இலிருந்து 2015 ஆகஸ்ட் 19 வரையிலும் பெறவேண்டிய பற்றுச்சீட்டுத் தொகை ரூபா 724,341 ஆகவிருந்ததுடன் வாடிக்கையாளர் சேவை முகாமையாளரின் பிரகாரம் இது ரூபா 51,569 ஆகவிருந்தது. எனினும், கம்பனியானது நுகரப்பட்ட அலகுகளின் எண்ணிக்கை, வாடிக்கையாளரிடமிருந்து அறவிடவேண்டிய தொகையை இனங்காணவும் 2022 திசெம்பர் இலும் இணங்கப்பட்டது. செயற்பாட்டுத் தலைவர் இது தொடர்பில் 29/11/2021 இல் பொதுமுகாமையாளருக்கு கடிதம் அனுப்பியிருந்துதுடன் இந்த ஒழுக்காற்று விசாரணை தொடர்பிலான சட்ட நிபந்தனைகள் தொடர்பில் அறிக்கையொன்றை சமர்ப்பிப்பதற்கும் இந்தத் தொகையை அறவிடுவதற்ம் சட்ட மற்றும் நிர்வாக முகாமையாளரை வழியுறுத்தியிருந்தார்.

நட்டத்தை அறவிடுவதற்கும் இத்தகைய சம்பவங்களை எதிர்காலத்தில் தவிர்ப்பதற்கு உள்ளக கட்டுப்பாட்டை முன்னேற்றுவதற்கும் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| | வாடிக்கையாளரிடமிருந்து நிலுவையை அறவிடுவதற்கு தவறியிருந்தததது. | | |
| (ஈ) | கம்பனியின் விசாரணைப்பிரிவு கிரிபத்கொடவிலுள்ள அனுமதிக்கப்படாத (வணிக) இடத்திலுள்ள அனுமதிக்கப்படாத இலத்திரனியல் இணைப்பு தொடர்பிலான விடயம் தொடர்பில் உடனடி நடவடிக்கையை எடுத்திருக்கவில்லையென்பதுடன் இது 2021 திசெம்பர் 10 இல் விசாரணைக்குட்படுத்தப்பட்டது. விசாரணைப்பிரிவு உடனடியாக சொல்லப்பட்ட சம்பவத்திற்கு சமூகமளிக்காமையால 3 நாட்களிற்குப் பின்னர் கடமைக்கு சமூகமளித்தமையால் ஆவணங்கள் சந்தேகத்திற்குரியவரால் அழிக்கப்பட்டதுடன் அதனால் கம்பனிக்குரிய நட்டத்தை அறவிடுவதற்கான சாத்தியங்கள் இழக்கப்பட்டிருந்தன. | இது தொடர்பில் மேலதிக நடவடிக்கைகளை எடுப்பதற்கு கணக்காய்வு அவதானிப்புக்கள் அவதானிக்கப்பட்டதுடன் இது முறையான விசாரணையை நடாத்துவதற்கு பட்டியலிடப்பட்டதுடன் அதற்காக மேற்கொள்ளப்பட்ட விடயங்கள் தொடர்பில் மேலதிக நடவடிக்கைகளை எடுப்பதற்கும் பட்டியலிடப்பட்டது. மேலதிகமாக, விசாரணைப் பிரிவின் முழுச்செய்முறையும் படிப்பதற்கும் முறையான, வினைத்திறனான மற்றும் சரியாக முறையை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கைகளை எடுப்பதற்கும் இணங்கப்பட்டது. | கம்பனிக்கு நட்டத்தை ஏற்படுத்தக்கூடிய சம்பவங்களை கண்டுபிடிப்பதற்கு உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | 2017 செப்தெம்பர் 29 ஆந் திகதிய ஏடிஎம்/ஈஎஸ்வி/017 ஆம் இலக்க உள்ளகச் சுற்றறிக்கையை அடிப்படையாகக் கொண்டு மேலதிகப்படிகள் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. எனினும், இந்தச் சுற்றறிக்கை. கள உத்தியோகத்தர் தவிர்ந்த ஏனைய உத்தியோகத்ததரொருவருக்கு மாதமொன்றுக்கு வேலைசெய்யக்கூடிய மேலதிகநேர மணித்தியாலங்களின் அதிகூடிய எண்ணிக்கைய உள்ளடக்கியிருக்கவில்லை. | மேலதிகநேரமாக மேலதிக நேரங்களை பணன்படுத்துவதை குறைப்பதற்காக நடவடிக்கைகளை எடுப்பதற்கான கணக்காய்வு அவதானிப்பு இணங்கப்பட்டது. | நிறுவனத்தின் அதிகூடிய அனுகூலங்களைப் பெறுவதற்காக உத்தியோகத்தர்களை வினைத்திறனாக வேலைக்கமர்த்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு வினைத்திறமையீன்மைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பொதுப்பேரேட்டு அறிக்கைகளின் பிரகாரம், 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு எக்கல களஞ்சியங்களிலுள்ள நகர்வடையாத இருப்புக்களின் பெறுமதி ரூபா 93,419,799 ஆகவிருந்ததுடன் இது 1990 இற்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்ட பயன்னடுத்தமுடியாத சில இருப்புக்களையும் உள்ளடக்கியிருந்தது. | பொருள் கணிப்பீட்டு சபை அளவையை (பீஒஎஸ்) மேற்கொண்ட பின்னர் அகற்றல் களஞ்சியத்திற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிறுவனத்தின் நோக்கங்களை அடையும் வகையில் நிறுவனத்தின் வளங்கள் பயன்படுத்தப்பட வேண்டும். |

### 3.3 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 யூலை 26 இல் Earth Auger உடனான 03 Hydraulic Crane Trucks இனை ரூபா 104,220,000 இல் கொள்வனவு செய்கையில் விலைமனுதாரர் பாரிய வேறுபாடாக கருதிய விலைமனுதாரரை பிரதிநிதித்துவப்படுத்துவதற்காக விலைமனுக்களை கையொப்பமிட்ட நபரிற்கான சட்டபூர்வ ஆவணத்தை சமர்ப்பிக்காமையால் பெறப்பட்ட விலைமனுக்களில் விலைமனுவொன்றினை தொழில்நுட்ப மதிப்பீட்டுக்குழு நிராகரித்திருந்தது. பின்னர், மற்றைய விலைமனுதாரர் சிபாரிசுசெய்யப்பட்டிருந்தார். எனினும், பெறுகைக்குழுவினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின் பிரகாரம், முதலில் நிராகரிக்கப்பட்ட விலைமனுதாரருக்கு பதிலாக விலைமனுக்களை கையொப்பமிட்ட நபரிற்கான அனுமதிக்காக சட்ட தீரமானத்தைப் பெற்ற பின்னர் நிராகரிக்கப்பட்ட விலைமனு மீளமதிப்பிடப்பட்டிருந்தது. அதனைத்தொடர்ந்து, தேசிய பெறுகை வழிகாட்டியின் 7.8.6 மற்றும் 7.8.4 ஆம் வழிகாட்டியிலுள்ள ஏற்பாடுகள் மற்றும் விலைமனு ஆவணத்தின் 2.5 ஆம் முரணாக முன்பு நிராகரிக்கபட்ட விலைமனுதாரருக்கு கம்பனி வழங்கியிருந்தது. | உயர்தர விசேடமுள்ள வாகனத்தின் கொள்வனவு தொடர்பில் இந்த மனு இருப்பதுடன் நாட்டினுள்ள விநியோகஸ்தர்களின் எண்ணிக்கை வரையறுக்கப்பட்டிருந்தது. LECO போட்டி விலைமனுக்களை கோரியிருந்தபோதிலும் மூன்று வழங்குனர்கள் மாத்திரம் விலைமனுக்களை சேகரித்திருந்ததுடன் அதில் இரண்டு வழங்குனர்கள் மாத்திரம் அவர்களுடைய விலைமனுக்களை சமர்ப்பித்திருந்தனர். டிபீசீ மேயர் விலைமனு செயன்முறைக்கு மேலதிக போட்டிததன்மையை எடுத்துவருவதற்கும் கம்பனியின் உற்பத்தி நன்மையளிக்கும் வகையில் மேலதிக வினைத்திறனாக கொள்வனவு செய்வதிலும் உண்மைத்தன்மையில் செயற்பட்டிருந்தார். இரண்டு விலைமனுதாரர்களின் விலைகளுக்கிடையிலான வித்தியாசம் அண்ணளவாக ரூபா 9.9 மில்லியனாக மற்றும் LECO இற்கு 9.5% சேமிப்பாகவுள்ளது. | பெறுகை வழிகாட்டி பின்பற்றப்பட வேண்டும். |

## 3.4 மனித வளங்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கம்பனியின் ஆட்சேர்ப்பு செய்முறையின் பிரகாரம், மனித வளங்கள் முகாமைத்துவப் பிரிவு ஆட்சேர்ப்பு செய்முறையை மேற்கொள்ளாததுடன் அதற்குப்பதிலாக வெற்றிடப்பிரிவுகள் விண்ணப்பங்களை கோரியிருந்ததுடன் தகுதியானவர்களை தெரிவு செய்கிறது. | கம்பனியின் தற்போதுள்ள ஆட்சேர்ப்புச் செய்முறை யானது தெரிவு செய்வதற்காக விண்ணப்பங்களை உரிய பிரிவுகளுக்கு அனுப்புகிறது. அதற்குப்பிறகு, நேர்முகத்தேர்விற்காக தகுதியான விண்ணப்பதாரர்களை அழைத்தல், நேர்முகக் குழுவிற்கு உறுப்பினர்களை நியமித்தல் நியமனங்களை மேற்கொள்வதற்கு முன்னர் பரிந்துரைக்கப்பட்டவர்களிற்காக சபையின் அனுமதியை பெறுதல் மற்றும் சபை அனுமதியை வழங்கிய பின்னர் ஆட்சேர்த்தலுக்குரிய நடவடிக்கைகள் மனித வளங்கள் பிரிவால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அமைய அடிப்படையிலான ஆட்சேர்ப்புக்கள் மனித வளங்களிக் தலைவர் உறுதிப்படுத்தியதால் மேற்கொள்ளப்பட்டது. | கம்பனிக்காக தகுதிவாய்ந்த உத்தியோகத்தர்களை வேலைக்கமர்த்துகையில் சரியான முறைமை அபிவருத்திசெய்யவேண்டியுள்ளது. |

(ஆ) மீளாய்வாண்டில் பெறப்பட்ட பொது பிரதிநிதித்துவத்தை பரீட்சிக்கையில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறுள்ளது.

(i) முறையான அனுமதியைப் பெறாமை, முறையற்ற தெரிவுசெய்தல், வேட்பாளர்களின் தகுதிகளை முறையாக மதிப்பிடாமை மற்றும் அதிகூடியவகையில் தகுதிவாய்ந்த வேட்பாளர்களை தெரிவு செய்வதில் கவனஞ்செலுத்தாமை போன்றவற்றை கொண்டு எஸ்ஓஆர் இற்கு மாற்றங்களை மேற்கொள்ளும் சந்தர்ப்பங்களானது கம்பனியின் பல்வேறு பதவிகளுக்கு ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்ளும்போது அவதானிக்கப்பட்டது.

(ii) கம்பனியானது தாபனவிதிக்கோவை மற்றும் அதன் ஒழுக்காற்று குறியீடு போன்றவற்றின் பிரகாரம் நேரத்திற்குநேரம் குற்றப்பத்திரிகைகளை வழங்குவதற்கும் காலதாமதமில்லாமல் ஆரம்ப மற்றும் உள்ளக விசாரணைகளை மேற்கொள்வதற்கும் ஒழுக்காற்று கட்டளைகளை வழங்குவதற்கும் நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை. மேலும், கம்பனியானது பல சந்தர்ப்பங்களில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் சான்றுகளை உள்ளடக்கிய பதிவேடுகளையும் ஆவண கோவைகளையும் பேணுவதற்கு தவறியிருந்தது.

## 4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 4.1 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் (எஸ்டிஜீ) தொடர்பான ஐக்கிய நாடுகளின் ''2030 ஆம் ஆண்டு நிகழ்ச்சிநிரலின்'' பிரகாரம் அனைத்து அரச நிறுவனங்களும் அதன் நோக்கெல்லையின் கீழ் வருகின்ற நோக்கங்கள் மற்றும் தொழிற்பாடுகளை அமுல்ப்படுத்தும் போது பங்களிப்பு செய்ய வேண்டிய போதிலும் கம்பனி எஸ்டிஜீ தொடர்பாக அறிந்திருக்காததுடன் அடைந்துகொள்ளப்பட வேண்டிய இலக்குகள், அவ் இலக்குகளை அடைந்துகொள்வதிலுள்ள இடைவெளிகள் மற்றும் அதேபோல் செயன்முன்னேற்றத்தை அளவிடுவதற்குப் பொருத்தமான சுட்டிகள் என்பவற்றை இனங்கண்டிருக்கவில்லை. | முகாமைத்துவக் கருத்துரைகள் பெறப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் தொடர்பான ஐக்கிய நாடுகளின் ''2030 ஆம் ஆண்டு நிகழ்ச்சிநிரலுடன்'' இணங்குதல் வேண்டும். |

## 4.2 தீர்க்கப்படாத கணக்காய்வுப் பந்திகள்

முன்னைய ஆண்டில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட 1.6.2(இ), 3.2(ஈ), 3.2(உ), மற்றும் 3.2 (ஒ) ஆம் இலக்க கணக்காய்வு பந்திகள் மீளாய்வாண்டின் இறுதியளவிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.